சுருக்கம்

நிலம் – விருதுநகர் மாவட்டம் – சாத்தூர் வட்டம் மற்றும் நகரம் – வார்டு 'ஏ' – பிளாக் எண்4, நகரளவை எண்.59, பரப்பளவு 3.22 ஏக்கர் – சாத்தூர் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் கட்ட ஒரு மடங்கு சந்தை மதிப்பை வசூலித்துக் கொண்டு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டது – தற்போது நிலக்கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய்த்(நி.மு.5(1)துறை

அரசாணை (நிலை) எண்.435

நாள்:–16.11.2009

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.548, வருவாய்த்துறை, நாள் 18.09.2008.
2. சாத்தூர் நகராட்சி ஆணையரின் கடித எண்.466/2008/எப்1, நாள் 19.01.2009.
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித எண்.3510/2009/டிபி4, நாள் 21.07.2009.

***

ஆணை:–

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம் மற்றும் நகரம், புல எண்.59, வார்டு 'ஏ', பிளாக் எண்.4இல், 3.22 ஏக்கர் பரப்பளவுள்ள மரியன் ஊரணி, மயானம் என வகைபாடுள்ள நிலத்தை, சாத்தூர் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பொருட்டு ஒரு மடங்கு சந்தை மதிப்பை நிலக்கிரயமாக வசூலித்துக் கொண்டு, வருவாய் நிலை ஆணை 24இன்கீழுள்ள, வழக்கமான நிபந்தனைகளுடன் நில உரிமை மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. சாத்தூர் நகராட்சி ஆணையர், பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், சாத்தூர் நகராட்சியின் நிதி நிலைமை திருப்திகரமாக இல்லாததால், மேற்சொன்ன அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு ஒரு மடங்கு சந்தை மதிப்புத் தொகையை செலுத்திப் பெற முடியாத நிலையில் உள்ளது என்றும், இது தொடர்பாக சாத்தூர் நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் கூறி, மேற்குறிப்பிட்ட இடத்தினை சாத்தூர் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு முற்றிலும் இலவசமாக வழங்க அரசுக்குப் பரிந்துரை செய்யுமாறு விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவரைக் கேட்டுக் கொண்டுள்ளார். பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநரும், பிரஸ்தாப புலத்தினை இலவசமாக நில உரிமை மாற்றம் செய்ய பரிந்துரை செய்துள்ளார்.

3. சாத்தூர் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரைகளை அரசு நன்கு ஆய்வு செய்தது. அதன் அடிப்படையில் பொது மக்களின் தேவையையும், சாத்தூர் நகரின் வளர்ச்சியையும் கருத்தில்கொண்டு, அதே நேரத்தில் புதிய பேருந்து நிலையத்திற்கான அவசியத்தையும் மற்றும் சாத்தூர் நகராட்சியின் நிதி நிலையையும் கருத்தில் கொண்டும், பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஒரு மடங்கு சந்தை மதிப்பு, நிலக்கிரயமாக வசூலித்துக்கொண்டு நிலஉரிமை மாற்றம் செய்து வெளியிடப்பட்ட ஆணைக்குப் பதிலாக கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:–

ITS

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம் மற்றும் நகரம், வார்டு 'ஏ', பிளாக் எண்.4, நகரளவை எண்.59, விஸ்தீரணம் 3.22 ஏக்கர் நிலத்தை சாத்தூரில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு, சாத்தூர் நகராட்சிக்கு ஒரு மடங்கு சந்தை மதிப்பை வசூலித்துக்கொண்டு நில உரிமை மாற்றம் செய்து வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.548, வருவாய்த்துறை, நாள் 18.9.2008க்கு பதிலாக, இப்புலம் தற்போது சாத்தூர் நகராட்சிக்கு, <u>நிலக்கிரயமின்றி</u> <u>இலவசமாக</u> வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி மூன்றில் உள்ள ஆணைக்கேற்ப தொடர் நடவடிக்கை எடுக்கும்படி விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் மாவட்டம், விருதுநகர்.
இயக்குநர், நகராட்சி நிர்வாகம், சென்னை–5.
ஆணையர், சாத்தூர் நகராட்சி, சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.

<u>நகல்</u>
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை/ நிதித்துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் வீட்டுவசதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளர் வருவாய்த்துறை அவர்களின் தனிச்செயலாளர், சென்னை–9.
அரசு துணைச் செயலாளர் (நி.மு) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.